


# 26.04.2026 செய்திகள்

## நிதி ஆயோக் மறுசீரமைப்பு

- நிதி ஆயோக் புதிய துணைத் தலைவராக அசோக் குமார் லாஹிரி நியமிக்கப்பட்டுள்ளார்.
- மேலும், அதன் 5 முழு நேர உறுப்பினர்களாக பொருளாதார நிபுணர் கே.வி. ராஜு, எய்ம்ஸ் இயக்குநர் எம்.ஸ்ரீநிவாஸ், மத்திய அறிவியல் - தொழில் நுட்பத் துறை செயலர் அபய் காந்திகர், விஞ்ஞானி கோவர்தன் தாஸ், மத்திய அமைச்சரவை முன்னாள் செயலர் ராஜீவ் கௌபா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- இந்தியாவின் கொள்கை உருவாக்கத்திலும், கூட்டுறவு கூட்டாட்சியை மேம்படுத்து-வதிலும், வாழ்வை எளிமையாக்குவதை ஊக்குவித்து அதற்கான சீர்திருத்தங்களை முன்னெடுப்பதிலும் முக்கிய தூணாக நிதி ஆயோக் உருவெடுத்துள்ளது.
- இது பல்வேறு துறைகள் சார்ந்த புதிய கண்டுபிடிப்புகள், நீண்ட கால உத்திசார் சிந்தனைகளுக்குமான தளமாகவும் நிதி ஆயோக் செயல்படுகிறது என்றும் தனது பதிவில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.
- பிரதமர் தான் நிதி ஆயோக் அமைப்பின் தலைவர் ஆவார்.
- மேற்கு வங்க பா.ஜ.க எம்.எல்.ஏ. வான அசோக் குமார் லாஹிரி மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகராப் பணியாற்றியவர்.
- 15-வது நிதி ஆணைய உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

SURESH'